EASTERN UNIVERS 23 AUG 2013

# Eastern University, Sri Lanka

## Faculty of Commerce and Management

## External Degree

## Part III (4th Year) Examination in Bachelor of Business Administration 2008/2009

## (May/June 2013) Proper/Repeat

## EXB 401(b) Taxation

எல்லா வினாக்களுக்கும் விடை தருக. நேரம்: 2 மணித்தியாலங்கள்

குறிப்பு: எடுகோள்கள் தெளிவாக குறிப்பிடப்பட வேண்டும் பக்கங்கள்: 04

---

1. திரு. விபிசன் மட்டக்களப்பில் உள்ள "விபிசன் பல்பொருள் அங்காடி" எனும் வியாபார ஸ்தாபனத்தின் உரிமையாளராவார் அவரது வியாபாரத்தின் 31.03.2012 முடிவடைந்த ஆண்டுக்கான வியாபார இலாப நட்டக்கணக்கும் அத் தேதியிலுள்ளவாறான ஐந்தொகையும் கீழே தரப்பட்டுள்ளன.

**"விபிசன் பல்பொருள் அங்காடி"யின்**

**31.03.2012 முடிவடைந்த ஆண்டுக்கான வியாபார இலாப நட்டக்கணக்கு**

| | ரூபா | ரூபா | | ரூபா |
|---|---|---|---|---|
| ஆரம்ப இருப்பு | | 17,000,000 | விற்பனைகள் | 99,000,000 |
| கொள்வனவு | | 87,194,000 | | |
| | | 104,194,000 | | |
| கழி: இறுதி இருப்பு | | (20,000,000) | | |
| விற்ற சரக்கின் கிரயம் | | 84,194,000 | | |
| மொ.இ.கீ / செ | | 14,806,000 | | |
| | | **99,000,000** | | **99,000,000** |
| பெறுமான தேய்வுகள் | | 419,000 | மொ.இ.கீ / வ | 14,806,000 |
| கட்டிட திருத்த செலவு | | 420,000 | தேறிய வட்டி | 108,000 |
| சம்பளம், கூலி | 1,860,000 | | வான் விற்பனை இலாபம் | 150,000 |
| உ.பொ.சே | 140,000 | | களஞ்சிய வாடகை (மொத்தம்) | 100,000 |
| ஊ.சே.நி, ஊ.ந.நிதி | 360,000 | 2,360,000 | | |
| அன்பளிப்புகள் | | 2,100,000 | | |
| மின்சாரம் | | 380,000 | | |
| தொலைபேசி | | 250,000 | | |
| மோ.வாகன திரத்தம் | | 425,000 | | |
| போக்குவரத்து | | 250,000 | | |
| விளம்பரம் | | 950,000 | | |
| காப்புறுதி | | 1,400,000 | | |
| NBT | | 965,000 | | |
| சோலைவரி | | 170,000 | | |
| கேளிக்கைச் செலவுகள் | | 650,000 | | |
| வங்கி வட்டி | | 485,000 | | |
| அ.மு.க. ஒதுக்கம் | | 40,000 | | |
| புகைப்பட பிரதி இயந்திரம் கொள்வனவு | | 790,000 | | |
| குத்தகை வாடகை செலுத்தியது | | 240,000 | | |
| தேறிய இலாபம் | | 2,870,000 | | |
| | | 15,164,000 | | 15,164,000 |

## விபிசன் பல்பொருள் அங்காடியின்
## 31.03.2012 உள்ளவாறான ஐந்தொகை

| பொறுப்புக்கள் | ரூபா | ரூபா | சொத்துக்கள் | ரூபா | ரூபா |
|---|---|---|---|---|---|
| மூலதனம் | | 2,500,000 | காணி கட்டிடம் | | 2,500,000 |
| நடைமுறைக்கணக்கு | 100,000 | | மோட்டார் வாகனம் | | 2,400,000 |
| தேறிய இலாபம் | 2,870,000 | | தளபாடங்கள் | | 140,000 |
| | 2,970,000 | | கடன் பட்டோர் | 720,000 | |
| (-) பற்றுக்கள் | 1,956,000 | 1,014,000 | (-) அ.மு.க.ஒதுக்கம் | 240,000 | 480,000 |
| | | | இருப்பு | | 10,000,000 |
| வியாபாரக் கடன் | | 1,106,000 | காசு: வங்கியில் | | 75,000 |
| வங்கிக்கடன் | | 2,000,000 | கையில் | | 25,000 |
| | | 6,620,000 | | | 6,620,000 |

குறிப்புகள்:

1) நிலையான சொத்துக்கள்

| | 1.4.2011ல் மீதி | சேர்த்தல் | விற்பனை | 31.03.2012ல் மீதி |
|---|---|---|---|---|
| காணி கட்டிடம் | 1,950,000 | 550,000 | | 2,500,000 |
| மோட்டார் வாகனம் | 2,000,000 | 1,000,000 | (600,000) | 2,400,000 |
| தளபாடங்கள் | 100,000 | 40,000 | - | 140,000 |
| | 4,050,000 | 1,590,000 | 600,000 | 5,040,000 |

2) பெறுமானத் தேய்வொதுக்கம்

| | 1.4.2011ல் மீதி | சேர்த்தல் | விற்பனை | 31.03.2012ல் மீதி |
|---|---|---|---|---|
| காணி கட்டிடம் | 487,500 | 55,000 | | 542,500 |
| மோட்டார் வாகனம் | 850,000 | 350,000 | (250,000) | 950,000 |
| தளபாடங்கள் | 40,000 | 14,000 | - | 54,000 |
| | 1,377,500 | 419,000 | 250,000 | 1,546,500 |

3) காணி கட்டிட ஆரம்ப மீதி வ/ஆ 2006/2007ல் அவருக்கு அவரது மாமனார் மூலம் நன்கொடையாகக் கிடைத்தாகும்.

இவ்வாண்டு புதிதாக ஒரு கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டு வேறோருவருக்கு களஞ்சிய தேவைக்காக வாடகைக்கு விடப்பட்டுள்ளது.

4) வ/ஆ 2007/2008ல் கொள்வனவு செய்யப்பட்ட வினியோக வான் (Van) 30.03.2012 அன்று விற்பனை செய்யப்பட்டு 31.03.2012 அன்று ஒரு புதிய வான் கொள்வனவு செய்யப்பட்டு அன்றைய தினமே வியாபாரத்தில் பயன்படுத்தப்பட்டது.

மோட்டார் வாகன ஆரம்ப மீதி வ/ஆ 2009/2010 இல் ரூபா 1,000,000/- பெறுமதியான லொறியொன்றையும், விற்பனை செய்யப்பட்ட வானினையும் கார் ஒன்றையும் கொண்டுள்ளது.

5) ஆரம் மீதியிலுள்ள அனைத்து தளபாடங்களும் வ/ஆ 2007/2008 இல் கொள்வனவு செய்யப்பட்டவையாகும்.

6) அ.மு.க ஒதுக்கக் கணக்கு

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கடன்பட்டோர் கணக்கு | | 10,000 | மீ/கீ/வ பொது | 110,000 | |
| மீ/கி/செ | | | விசேடம் | 70,000 | 180,000 |
| விசேடம் | 85,000 | | | | |
| பொது | 155,000 | 240,000 | காசுக்கணக்கு | | 30,000 |
| | | | இ/ந க/கு | | 40,000 |
| | | 250,000 | | | 250,000 |

23 AUG 2013
SRI LANKA

அ) விசேட ஒதுக்கும் பின்வருமாறு உள்ளது

| | ஆரம்ப மீதி | | இறுதி மீதி |
|---|---|---|---|
| கமல் | 50,000 | விமல் | 20,000 |
| விமல் | 20,000 | இக்பால் | 40,000 |
| | 70,000 | பண்டா | 25,000 |
| | | | 85,000 |

ஆ) ரூ. 30,000/- அறிவீடு முந்திய ஆண்டுகளில் பதிவழிக்கப்பட்ட ஒரு கடனைக் குறிக்கின்றது. இவ்வாண்டு நிசாரிடமிருந்து கிடைக்க வேண்டிய ரூ. 10,000/- பதிவழிக்கப்பட்டது.

7) குத்தகை வாடகையானது 01.10.2010 அன்று மூன்று ஆண்டு குத்தகைக்கு பெறப்பட்ட கன்ரர் வாகனத்தைக் குறிக்கின்றது. மாதவாடகை ரூ. 20.000/-

8) சோலை வரி, திருத்தச் செலவுகளில் 15% வாடகைக்கு விடப்பட்ட கட்டிடத்துக்குரியதாகும்

9) **அன்பளிப்புகள்**

| | |
|---|---|
| அனாதை இல்லமொன்றுக்கு உயவுப்பொருட்கள் வழங்கியது | 925,000 |
| சனாதிபதி நிதியத்துக்கு அன்பளிப்பு | 1,175,000 |
| | 2,100,000 |

10) **காப்புறுதி**

| | |
|---|---|
| ஆயுள் (விபிசன்) | 500,000 |
| வியாபாரக் காப்புறுதி | 900,000 |
| | 1,400,000 |

11) தொலைபேசி, மின்கட்டணத்தில் 20% அவரது தனிப்பட்ட பாவனைக்குரியதாகும்

12) மோட்டார் வாகனத் திருத்தச் செலவு கார் திருத்தச் செலவான ரூபா 20,000/- யும் உள்ளடக்கியுள்ளது

**வினா**

வ.ஆ 2011/2012க்கு திரு. விபிசனின் மொத்த நியதிச்சட்ட வருமானத்தை கணிப்பிடுக.

(50 புள்ளிகள்)

**2.** அரசாங்க சேவையில் சிரேஷ்ட கணக்காய்வாளராயிருந்து ஓய்வு பெற்ற சிவா என்பவர் “கிழக்கு லங்கா லிமிட்டெட்” எனும் தனியார் நிறுவனத்தில் சந்தைப்படுத்தல் முகாமையாளராக தொழில் புரிகின்றார் 31.03.2012 இல் முடிவடைந்த ஆண்டுக்கான அவரது ஊதியங்களும் ஏனைய வருமானங்களும் பின்வருமாறு:

| | | | |
|---|---|---|---|
| அரசு ஓய்வூதியம் | | | 360,000 |
| கிழக்கு லங்கா லிமிட்டெட் சம்பளம் | | 800,000 | |
| (-) சேமலாப நிதி | 53,200 | | |
| உ.பொ.செ (PAYE) | 40,000 | (93,200) | 706,800 |
| ஊக்குவிப்பு | 200,000 | | |
| உ.பொ.செ. | (24,000) | | 176,000 |
| பிரயாணப்படிகள் | | | 100,000 |
| உபசரணைக் கொடுப்பனவுகள் | | | 120,000 |
| விடுமுறைக் கொடுப்பனவு | | | 60,000 |
| உணவுப்படிகள் | | | 80,000 |

**குறிப்புகள்**

1) அவர் உபசரணைக் கொடுப்பனவில் ரூ 80,000/- இனை கம்பனியின் வாடிக்கையாளர்களை உபசரிப்பதுற்கு செலவிட்டுள்ளர்.

2) பிரயாணப்படிகளில் ரூ 40,000/- னது தனது வதிவிடத்திலிருந்து வேலைத் தளத்துக்கு பயணம் செய்வதற்கு ஏற்பட்டதாகும் என்கிறார்.

3) அவர் தனது 16 வயது மகளுடன் சேர்ந்து தேசிய சேமிப்பு வங்கியில் கொண்டுள்ள நிலையான கூட்டுக்கு கணக்கு ஒன்றிலிருந்து ரூ 72,000/-ஐப் பெற்றுள்ளார்.

4) தனக்குரித்தான வயலிருந்து தேறிய விவசாய நட்டம் ரூபா 50,000/-

5) 2009 இல் அவரால் கட்டப்பட்ட 1600 ச.அடி பரப்பளவான வீட்டினை மாதம் 15,000/- வாடகைக்கு கொடுத்துள்ளார் அதன் சோலைவரி மதிப்பீடு ரூபா 150,000/-
சோலைவரி 30% மாகும்.

6) அவர் பின்வரும் செலவுகளைக் கோருகிறார்.
அ) 2009 இல் பெற்ற வீட்டுக்கடன் மீளச் செலுத்தல்
கடன் தொகையில் 40,000/-
வட்டி 15,000/-
ஆ) அங்கீகரிக்கப்பட்ட அறநிலையமொன்றுக்கு செய்த அன்பளிப்பு காசாக ரூபா. 25,000/-
இ) ஆயட் காப்புறுதிக் கட்டணம் ரூபா. 90,000/-

**வினா**

வ/ஆ 2011/2012 க்கு திரு சிவா அவர்கள் செலுத்த வேண்டிய இறுதி வருமான வரி எவ்வளவு எனக் காண்க?

**(30 புள்ளிகள்)**

**3.** பின்வருவனவற்றுள் **எவையேனும் நான்கிற்கு** சிறுகுறிப்பு எழுதுக.

i) பெறுமதி சேர் வரி (VAT) பற்றி க.பொ.த.உயர்தரத்தில் வணிக பாடத்துறையில் கற்கும் மாணவன் நிமால் உம்மிடம் கேட்டறிய விரும்புகிறான் சுருக்கமாக விளக்குக.

ii) பொருளாதார சேவை விதிப்பனவு (ESC) பற்றி உமது கிராமத்தில் உள்ள ஒரு வர்த்தகர் பல்கலைக்கழக இறுதியாண்டு மாணவராகிய உம்மிடம் அறிய விரும்புகிறார். சுருக்கமாக விளக்குக.

iii) காணியொன்றைக் கொள்வனவு செய்ய விரும்பும் உமது உறவினர் ஒருவர், முத்திரை வரி (Stamp duty) பற்றிய விபரங்களை உம்மிடம் அறிய விரும்புகிறார் விளக்குக.

iv) உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின்படி “செல்லுபடியான மேன்முறையீடு” ஒன்றிற்கு தேவையான அம்சங்கள் எவை?

v) உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் வரிகளிலொன்றான நிறுத்தி வைத்தல் வரி (WHT) பற்றியும் அதன் அனுகூலத் தன்மையையும் பற்றி கருத்துரைக்க.

vi) அபிவிருத்தி அடைந்துவரும் நாடென்ற வகையில் இலங்கைக்கு வரிவிதிப்பனவின் அவசியத்தன்மை பற்றி கருத்துரைக்க.

**(4 X 5 = 20 புள்ளிகள்)**